UNIVERSITÄTS-
KINDERSPITAL
ZÜRICH

அவசர சூழ்நிலையில்
பெற்றோருக்கான தகவல்

# காய்ச்சல்



Das Spital der
Eleonorenstiftung

# காய்ச்சல்

ஒரு பிள்ளையின் சராசரி உடல் வெப்பநிலை வெப்பமானியை மலவாயிலில் வைத்து அளக்கும் போது, 37° செல்சியஸ் ஆகும். உடல் வெப்பநிலையானது எப்போதும் நிலையாக இருப்பதில்லை, அது நாளின் நேரத்தைப் பொறுத்து, 2° செல்சியஸ் (36-38°ஊ) மாறுபடும். அதிகாலையில் வெப்பநிலை மிகக் குறைவாகவும் முன்மாலைப்பொழுதில் அதிகமாகவும் இருக்கும்.

3 மாதத்துக்குட்பட்ட சிசுக்களுக்கு 38°ஊ க்கு மேலேயும், அதற்கும் கூடிய வயதுக் குழந்தைகளுக்கு 38.5°ஊ க்கு மேலேயும் உடல் வெப்பநிலையிருந்தால், நாம் அதனைக் காய்ச்சல் என்று கருதுகின்றோம்.

காய்ச்சலுக்கு வெவ்வேறுபட்ட காரணங்கள் இருக்கலாம். வைரஸ் கிருமிகளால் ஏற்படும் தொற்றுக்கள், சிறுவயதில் பிள்ளைகளுக்கு காய்ச்சல் ஏற்படுவதற்கான காரணங்களாக இருக்கலாம். வைரஸ் தொற்றுநோய்களுக்கு, அன்ரிபயோட்டிக் மருந்துகள் மூலம் சிகிச்சையளிக்க முடியாது, ஏனெனில் அவை வைரஸ் கிருமிகளுக்கெதிராக பயனளிக்காது. சில வேளைகளில் பக்றீரியா கிருமிகளும் தொற்றுக்களுக்குக் காரணமாக இருக்கலாம். பக்றீரியாத் தொற்றுநோய்களுக்கெதிராக குறிப்பாக அன்ரிபயோட்டிக் மருந்துகள் மூலம் சிகிச்சையளிக்க முடியும். அரிதாக ஒவ்வாமை எதிர்விளைவுகளும், தடுப்பு மருந்துகளும், மாற்ற முடியாத நோய்களும் சில அரிதான காரணங்களும் காய்ச்சலை உண்டாக்கலாம்.

காய்ச்சல் ஒரு நோயல்ல, அது உடலின் நோயெதிர்ப்புச்சக்தி தொழிற்பாட்டின் ஒரு வெளிப்பாடு ஆகும். காய்ச்சல் அபாயமற்றது அத்துடன் காய்ச்சலின் அளவுக்கும் இருக்கின்ற நோயின் கடுமைக்கும் எந்த தொடர்புமில்லை. தொற்றுக்கிருமி அழிக்கப்பட்டு விட்டதும் உடல் வெப்பநிலை சாதாரண நிலைக்கு வந்து விடும்.

உங்களது பிள்ளையின் உடல் வெப்பநிலையை எவ்வாறு அளப்பீர்கள்?

- 12 மாதங்களுக்குட்பட்ட சிசுக்களுக்கு வெப்பமானியை, மலவாயிலில் வைத்து அளக்கும்படி நாம் பரிந்துரைக்கின்றோம்.
- 1 வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு அக்குளில், வாய்க்குள் நாக்கின் கீழ், அல்லது காதுக்குள் அளக்கும் வெப்பமானி மூலம் காதுக்குள் வைத்துக் கணிக்க வேண்டும். இது வரையும் நீங்கள் காய்ச்சல் அளந்து பார்த்திருக்காது இருந்தால், அன்னையர் ஆலோசகிகளிடம், உங்கள் வைத்தியரிடம் அல்லது மருந்துக்கடைகளில் கேளுங்கள்.

---

மூன்று மாதங்களுக்குட்பட்ட சிசுக்களுக்கு, 38° செல்சியஸுக்கு மேல் காய்ச்சல் இருந்தால், உடனடியாக ஒரு வைத்தியரிடம் காட்ட வேண்டும்.

---

இந்தக் காய்ச்சல் மெதுவாகவும் அதிகரிக்கலாம், ஆனால் மிக வேகமாகவும் கூடலாம். தொற்றுடனுள்ள காய்ச்சல் அரிதாக, காய்ச்சல் வலிப்பையும் ஏற்படுத்தலாம். 6 மாதங்களுக்கும் 5 வயதுக்குமுட்பட்ட பிள்ளைகளுக்கு அரிதாக வரக் கூடிய இந்தக் காய்ச்சல் வலிப்பினால், பிள்ளைகளுக்கு நீண்ட கால பாதிப்புக்கள் இருப்பதில்லை. (பார்க்க. காய்ச்சல்வலிப்புப் பற்றிய பெற்றோர் கையேடு)

அதி கூடிய காய்ச்சலானது, உங்கள் பிள்ளையின் சாதாரண உடல்நிலையில் பாதிப்பை உருவாக்கலாம். அதி கூடிய காய்ச்சல் காரணமாக, உங்கள் பிள்ளையின் சாதாரண உடல்நிலையில் பாதிப்புக்கள் ஏற்படும் போது (சோர்வு,

களைப்பு, சினந்து கொண்டிருத்தல், திரவப் பதார்த்தங்களைக் குடிக்காமலிருத்தல்):

- உங்கள் பிள்ளையின் உடுப்புகளைக் கழற்றுங்கள் அல்லது குறைவாக போர்த்துங்கள்
- கூடிய காய்ச்சல் உடலில் நீரிழப்புக்கு வழி வகுக்கும், அதனால் தண்ணீர் அல்லது தேநீர் போன்றவற்றைக் கொஞ்சம் கொஞ்சமாக அடிக்கடி பருகக் கொடுங்கள்
- மருந்துப் பொட்டலத்தில் எழுதப்பட்டுள்ளவாறு வயதுக்கேற்ற அளவு பரசெற்றமோல் மருந்தை, குதவாயிலுக்குள் செலுத்தும் கூம்பக வடிவான மருந்துப் பொருளாகவோ (Zäpfchen) அல்லது குடிக்கும் பாணி மருந்தாகவோ (Sirup) ஒரு நாளைக்கு ஆகக் கூடியது 6 மணித்தியாலத்துக்கு ஒரு தடவை கொடுங்கள்
- நிலைமையை அவதானியுங்கள்: காய்ச்சல் குறைவடைய வேண்டும் அத்துடன் பிள்ளையின் உடல்நிலை தேற வேண்டும். ஒரு வேளை நிலைமையில் மாற்றம் ஏற்படாது விட்டால், உங்கள் வைத்தியரிடம் செல்லுங்கள்
- வைத்தியரிடம் செல்லாமல், இரண்டு நாட்களுக்கு மேல் 6 மணித்தியாலங்களுக்கொருமுறை பரசெற்றமோல் கொடுக்க வேண்டாம்


Petechien

## எப்போது நீங்கள் உங்களது வைத்தியரை நாட வேண்டும்?

- உங்கள் பிள்ளைக்குக் காய்ச்சலுடன் ஒரு வேளை கீழ்க்காணும் அறிகுறிகள் தென்பட்டால், நீங்கள் வைத்தியரை நாட வேண்டும்:
- உங்கள் பிள்ளை 3 மாதத்துக்குக் குறைந்ததாக இருந்து 38° செல்சியஸ் அல்லது அதற்குமதிகமாக காய்ச்சலிருந்தால்
- உங்கள் பிள்ளை தலையிடிப்பதாக முறையிடுவதுடன் கழுத்து கெட்டியாக இருந்து ஒளியைப் பார்க்க முடியாது கண் கூசினால்
- தொடர்ந்து உங்கள் பிள்ளை வாந்தியெடுப்பதுடன் நீராகாரம் எதுவும் உட்கொள்ள மறுத்தால்
- உங்கள் பிள்ளை மூச்செடுக்க முடியாது திணறினால்
- உங்கள் பிள்ளை மேலும் மேலும் உணர்வற்று, ஆழ்ந்த மயக்க நிலையான உறக்க நிலையிலிருந்தால்
- பரசெற்றமோல் மருந்தைத் தவறாது கொடுத்தும் உங்கள் பிள்ளையின் உடல்நிலையில் சுகம் தெரியாவிட்டால்
- நீங்கள் 6 மணித்தியாலங்களுக்கொரு தடவை பரசெற்றமோல் மருந்து கொடுத்தும் 2 நாட்களுக்கு மேல் காய்ச்சல் நீடித்தால்
- உங்கள் பிள்ளைக்கு காய்ச்சல்வலிப்பு இருந்தால்
- உங்கள் பிள்ளையின் உடல் முழுவதும் கொசுக்கடி போன்ற, அழுத்தினால் மறையாத, அழகில்லாத சிவப்பு புள்ளிகள்/தடங்கள் ஏற்பட்டால் (பார்க்க. படம்)

சுருக்கமாக:

- பிள்ளைகளுக்கு அடிக்கடி காய்ச்சல் வரும். வைரஸ் தொற்றுக்களே அநேக-மான காரணமாக இருக்கும்
- 3 மாதங்களுக்குட்பட்ட சிசுக்களுக்கு 38° செல்ஸியஸூம் அதற்கும் அதிக-மாகவும் காய்ச்சல் இருந்தால், தாமதிக்காமல் வைத்தியரிடம் காண்பிக்க வேண்டும்
- காய்ச்சல் பாதிப்படைய வைப்பதோ அன்றேல் அபாயமானதோ அல்ல, ஆனால் அது உடலானது தொற்றுக்கிருமிகளுக்கெதிரான எதிர்ப்பை வெளிப்படுத்தும் அறிகு-றி. காய்ச்சல் அதிகம் என்பது முக்கியமானதல்ல, பிள்ளையின் உடல்நிலைதான் முக்கியமானதாகும்
- பிள்ளையின் உடல்நிலை நன்றாக இருந்தால், (விளையாட்டில் விருப்பம், சந்தோசமாக இருத்தல்) நீங்கள் அவசியம் காய்ச்சலைக் குறைக்க வேண்டியதில்லை, சா-தாரண உடல்நிலையில் பாதிப்புக்கள் இருந்தால், நீங்கள் Zäpfchen அல்லது பாணி மருந்துகள் வடிவ-ிலான பரசெற்றமோல் மருந்துகளை ஆகக் கூடியது ஒவ்வொரு 6 மணித்தியாலங்களுக்கு ஒரு தடவை கொடுக்கலாம், போதியளவு நீராக-ாரம் கொடுத்து காத்திருக்க வேண்டும் அத்துடன் நிலைமையைக் கண்காணிக்க வேண்டும்
- எதுவாக இருந்தாலும், காய்ச்சலுடன் மேற்கூறப்பட்ட அறிகுறிகள் தென்பட்டால் அல்லது உங்களுக்கு நிச்சயமற்ற நிலையாக இருந்தால் அல்லது உங்கள் பிள்ளையையிட்டு நீங்கள் கவலைப்படுவீர்களானால், நீங்கள் வைத்தியருடன் தொடர்பு கொள்ள வேண்டும்

---

UNIVERSITÄTS-
KINDERSPITAL
ZÜRICH

Das Spital der
Eleonorenstiftung

Kinderspital Zürich - Eleonorenstiftung
Steinwiesstrasse 75
CH-8032 Zürich

www.kispi.uzh.ch